வரும் கூட, தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் என்னிடம் உரைத்தார்கள். இனியாயினும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே சிக்கல் ஏற்கனவே தீர்ந்து விட்டது. இனிமேல் ஒன்றும் இல்லை.

* வினா எண். 87—திரு. துரைமுருகன் :—மாண்புமிகு தொழிலாளர் நலத்துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னையாற்றிலிருந்து சோளிங்கர் நகரத்திற்கு குடிநீர் எடுத்துச் செல்லப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், வழியில் உள்ள தீயார்குப்பம், கீரைச் சாத்து, மிளகாய் குப்பம் ஆகிய கிராமங்களுக்கு அந்த குழாய்களிலிருந்து நீர் வழங்கும் திட்டம் அரசுக்கு உண்டா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) இல்லை,

(இ) இவ்வினா எழ இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 88, 89 ஒன்றாக எடுக்கப்படும்.

இடவசதி கட்டுப்பாடிட்ன் கீழ் உள்ள வீடுகள்

* வினா எண். 88—திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு தொழிலாளர்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் எத்தனை வீடுகள் Accommodation Control-ல் இருந்து நடப்பாண்டில் விடுவிக்கப்பட்டிருக்கிறது

(ஆ) சென்னை நகரில் Accommodation Control-ல் எத்தனை வீடுகள் தற்போது உள்ளன ?